**2025.12.01 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்**

**01. இலங்கை இராசரட்டைப் பல்கலைக்கழக மாணவர்கள், கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கான விடுதி வசதிகளை வழங்குவதற்கான கட்டிடங்களை அமைப்பதற்கு காணித்துண்டை வழங்குதல்**

1995 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட இலங்கை இராசரட்ட பல்கலைக்கழகத்தின் மருத்துவ மற்றும் பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞான பீடங்களில் தற்போது 2,070 மாணவர்கள் கல்வி கற்று வருவதுடன், குறித்த பீடங்களில் இணைப்பு செய்யப்பட்டு 150 கல்வி மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் பணியாற்றுகின்றனர் அநுராதபுரம் - மதவாச்சி பிரதான வீதிக்கு அருகாமையில் கிராமியப் பிரதேசத்தில் மட்டுப்படுத்தப்பட்ட நிலப்பரப்பில் அமைந்திருப்பதால், அங்குள்ள மாணவர்களுக்கும் ஊழியர்களுக்கும் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற வகையில் பொருத்தமான விடுதி வசதிகளை வழங்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. மாணவர் விடுதிக் கட்டிடத்தொகுதி 02 உம், கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களின் குடும்ப அலகுகளுக்கான உத்தியோகபூர்வ இல்லங்கள் 06 உம், தனி உத்தியோகபூர்வ இல்லங்கள் 12 உம், மற்றும் கரப்பந்து, வலைப்பந்து விளையாட்டு தளங்கள் 02 உம் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அந்தந்த பீடங்களுக்கு அருகாமையில் அமைந்துள்ள மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலகப் பிரிவில் தன்னாயன்குளம் கிராமத்தில் அமைந்துள்ள 02 ஏக்கர் 9.6 பேர்ச்சர்ஸ் அரசுக்கு சொந்தமான காணி பொருத்தமானதென அடையாளங் காணப்பட்டுள்ளது. அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அளிப்புப் பத்திரத்தின் மூலம் ஒப்படைப்பதற்காக, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. இலங்கை சுங்கத் தன்னியக்க கணணித் தரவுக் கட்டமைப்பை (ASYCUDA System) மேம்படுத்துவதற்காக வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் சம்மேளனம் (UNCTAD) உடன் இணைந்து தற்போது இருக்கின்ற ஒப்பந்தத்தில் மேலதிகங்களுக்கு கையொப்பமிடல்**

1991 ஆம் ஆண்டில் சர்வதேச நாணய நிதியத்தால் தன்னியக்கம் தொடர்பான கவனம் செலுத்தப்பட்டு கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் விதந்துரைக்கப்பட்டு, இலங்கை சுங்கத் தன்னியக்க கணணித் தரவுக் கட்டமைப்பை (ASYCUDA System) பயன்படுத்தப்படுகின்றது. பின்னர், இலங்கை வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் சம்மேளனத்தால் மேம்படுத்தப்பட்ட ASYCUDA கணணிக் கட்டமைப்பு அதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தொழிநுட்ப ஒத்துழைப்பு மற்றும் மேலும் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக இலங்கை சுங்கம் மற்றும் ASYCUDA கணணிக் கட்டமைப்புக்கு விசேட நிபுணத்துவ அறிவை வழங்குகின்ற ஒரேயொரு அமைப்பான UNCTAD இற்கும் இடையிலான மேலதிக 05 ஒப்பந்தங்கள் இதற்கு முன்னர் கையொப்பமிடப்பட்டுள்ளது. UNCTAD இனால் தொழிநுட்ப சலுகைக் காலம் 2027 யூன் மாதம் வரை நீடிப்பதற்கும், தற்போது பயன்படுத்தப்படும் ASYCUDA World கணணிக் கட்டமைப்பை மேம்படுத்தல் மற்றும் ASYCUDA மற்றும் ASYHUB கட்டமைப்புக்களின் தொழிற்பாடு தொடர்பாக இலங்கை சுங்கத்தின் ஏற்புடைய பணிக்குழாமினருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இரண்டினை நடாத்துவதற்கு இயலுமாகும் வகையில் இலங்கை சுங்கம் மற்றும் UNCTAD இற்கும் இடையில் தற்போது இருக்கின்ற ஒப்பந்தத்திற்கு 6 ஆவது மேலதிக கையொப்பத்தை இடுவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. சீனாவின் செங்க்டுவில் இலங்கைக்கான தூதுப்பணி அலுவலகத்தை நிறுவுதல்**

2009.12.15 அன்று சீனாவின் செங்க்டுவில் இலங்கைக்கான தூதுப்பணி அலுவலகம் நிறுவப்பட்டு, அப்போது மோசமடைந்திருந்த நிதி மற்றும் வளங்கள் பற்றாக்குறையால், அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் 2016.06.30 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மூடப்பட்டுள்ளது. கௌரவ ஜனாதிபதி அவர்கள் இவ்வாண்டு ஜனவரி மாதம் சீனாவுக்கு மேற்கொண்ட அரச விஜயத்தின் போது, சிவுவான் மாநிலத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் குறித்த தூதுப்பணி அலுவலகத்தை மீண்டும் திறப்பதில் ஜனாதிபதி அவர்கள் கவனம் செலுத்தியுள்ளார். அதற்கிணங்க, சிவுவான் மாநிலத்தின் பூகோள அரசியல் முக்கியத்துவம், பொருளாதார இயலுமைகள், தொழிற்றுறை மற்றும் தொழிநுட்ப விருத்தி, பாரியளவிலான தொழிற்சாலைகள் மற்றும் வர்த்தக மற்றும் பொருளாதார தொடர்புகள் அவதானிக்கபட்டுள்ளன. சீனாவின் செங்க்டுவில் இலங்கைக்கான தூதுப்பணி அலுவலகத்தை மீண்டும் நிறுவுவதன் மூலம் இரண்டு நாடுகளுக்கிடையில் அரசியல், சமூகப் பொருளாதார மற்றும் கலாச்சார விவகாரங்களில் நிலவுகின்ற நட்புறவு மற்றும ஒத்துழைப்புக்களை மேலும் மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் கிடைக்குமென அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, சீனாவின் செங்க்டுவில் இலங்கைக்கான தூதுப்பணி அலுவலகத்தை மீண்டும் நிறுவுவதற்கு வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. அரச பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான புதிய கருத்திட்டங்களை ஆரம்பித்தல்**

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் கீழ் இயங்குகின்ற அரச பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 16 கருத்திட்ட முன்மொழிவுகளை தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் விதந்துரைக்கப்பட்டு அமுல்படுத்துவதற்காக 2026-2030 ஆண்டுக்கான அரச முதலீட்டு திட்டத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ளது. அதற்கமைய, பல்கலைக்கழக மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு வசதியளிக்கும் வகையிலும், மாணவர்கள் பயில்கின்ற பாடநெறிகளுக்குப் பொருத்தமான வகையில் பல்கலைக்கழக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் அரச பல்கலைக்கழகங்களை சர்வதேச தரமட்டத்திற்கு கொண்டு வரும் நோக்கில், கீழ்க்குறிப்பிடப்படும் கருத்திட்டங்களை 2026-2030 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கான பேராசிரியர் அலகொன்றை நிர்மாணித்தல், பூர்த்தி செய்தல் மற்றும் உபகரணங்களை விநியோகித்தல் - கருத்திட்ட மதிப்பீட்டுச் செலவு 3,594.14 மில்லியன் ரூபாய்கள்.
- பல்கலைக்கழக மாணவர்களுக்கான விடுதி வசதிகளை வழங்கல் - கருத்திட்ட மதிப்பீட்டுச் செலவு 26,625 மில்லியன் ரூபாய்கள்.
- பேராதனை பல்கலைக்கழக விடுதிப் புனரமைப்பு - கருத்திட்ட மதிப்பீட்டுச் செலவு 2,452 மில்லியன் ரூபாய்கள்.
- வவுனியா பல்கலைக்கழகத்தின் விடுதிக்கான கழிவுநீர் சுத்திகரிப்பு அலகொன்றை நிர்மாணித்தல் - கருத்திட்ட மதிப்பீட்டுச் செலவு 219 மில்லியன் ரூபாய்கள்.
- மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் வியாபாரக் கற்கைகள் பீடத்திற்கான உத்தேச கட்டிடத்தை நிர்மாணித்தல் மற்றும் பூர்த்தி செய்தல் - கருத்திட்ட மதிப்பீட்டுச் செலவு 1,309.42 மில்லியன் ரூபாய்கள்.

- ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பல்மருத்து பீடம் மற்றும் துணைச் சுகாதார பீடத்திற்கான பலநோக்குக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் - கருத்திட்ட மதிப்பீட்டுச் செலவு 3,419.38 மில்லியன் ரூபாய்கள்.
- உருஹுனு பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்கான உத்தேச கனக் கட்டமைப்பு எந்திரவியல் ஆய்வுகூடம் மற்றும் கடலோர மற்றும் துறைமுக எந்திரவியல் ஆய்வுகூடத்தை நிறுவுவதற்காக குடியியல் மற்றும் சுற்றாடல் பொறியியல் துறையின் கட்டிடத்தை விரிவாக்கம் செய்தல் - கருத்திட்ட மதிப்பீட்டுச் செலவு 1,453.97 மில்லியன் ரூபாய்கள்.
- கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுகாதார விஞ்ஞான பீடத்திற்கான மட்டக்களப்பு போதனா மருத்துவமனை பேராசிரியர் அலகை நிர்மாணித்தல் - கருத்திட்ட மதிப்பீட்டுச் செலவு 2,279 மில்லியன் ரூபாய்கள்.
- வவுனியா பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் சிற்றுண்டிச்சாலையை விரிவாக்கம் செய்தல் - கருத்திட்ட மதிப்பீட்டுச் செலவு 64 மில்லியன் ரூபாய்கள்.
- பேராதனை பல்கலைக்கழகத்தின் பல் மருத்துவ பீடத்தின் மாணவர்களுக்கான சிற்றுண்டிச்சாலையை விரிவாக்கம் செய்தல் - கருத்திட்ட மதிப்பீட்டுச் செலவு 100 மில்லியன் ரூபாய்கள்.
- வவுனியா பல்கலைக்கழகத்தின் மருத்துவ நிலையமொன்றை நிர்மாணித்தல் - கருத்திட்ட மதிப்பீட்டுச் செலவு 45 மில்லியன் ரூபாய்கள்.
- வவுனியா பல்கலைக்கழகத்திற்கான இரண்டு மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் - கருத்திட்ட மதிப்பீட்டுச் செலவு 474 மில்லியன் ரூபாய்கள்.
- ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் தொழிநுட்ப பீடத்திற்கான ஆய்வுகூடம், வேலைத்தளம் மற்றும் விரிவுரை மண்டபங்களுடன் கூடிய கட்டிடமொன்றை நிர்மாணித்தல் - கருத்திட்ட மதிப்பீட்டுச் செலவு 649.80 மில்லியன் ரூபாய்கள்.
- பேராதனை பல்கலைக்கழகத்தின் துணைச் சுகாதார பீடத்திற்கான ஆய்கூடத் தொகுதியை நிர்மாணித்தல் - கருத்திட்ட மதிப்பீட்டுச் செலவு 405 மில்லியன் ரூபாய்கள்.
- உருஹுனு பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞான பீடத்திற்கான ஆய்கூடத்தை நிர்மாணித்தல் - கருத்திட்ட மதிப்பீட்டுச் செலவு 2,342 மில்லியன் ரூபாய்கள்.
- இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் பீடத்திற்கான ஆறு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் - கருத்திட்ட மதிப்பீட்டுச் செலவு 885.80 மில்லியன் ரூபாய்கள்.

**05. வட்டியில்லாத மாணவர் கடன் திட்டத்தின் கீழ் கடனைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னிறுத்த வேண்டிய பிணையாளர்களின் தகைமைகளைத் திருத்தம் செய்தல்**

உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்காக அரசு சாரா உயர்கல்வி நிறுவனங்களில் அரச அங்கீகாரம் பெற்ற பட்டப்படிப்புக்களைத் தொடர்வதற்காக 2017 ஆம் ஆண்டு தொடக்கம் வட்டியில்லாத மாணவர் கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த வட்டியில்லாத மாணவர் கடன் திட்டத்திற்கமைய, தற்போது ஒன்பது ஆட்சேர்ப்புக்களின் கீழ் 23,162 மாணவர்களுக்கு நன்மைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், குறித்த மாணவர்களிடையே 5,772 மாணவர்கள் தற்போது பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்துள்ளனர். அக்கடன் திட்டத்தின் முதலாம் கட்டம் தொடக்கம் ஆறாம் கட்டம் வரை பிணையாளர்களாக மாணவரின் தாய்/தந்தை அல்லது பாதுகாவலருடன் நெருக்கமான உறவினர் ஒருவரையும் முன்னிறுத்துவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும், குறித்த நிபந்தனைகள் 2022 ஆம் ஆண்டு தொடக்கம் கடன் கோருகின்ற மாணவரால் முதலாவது பிணையாளியாக தாய்/தந்தை அல்லது பாதுகாவலரும், இரண்டாவது பிணையாளியாக வங்கியால் தீர்மானிக்கப்படுகின்ற வருமானத்துடன் கூடிய ஒருவரை

முன்னிறுத்த வேண்டுமென திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதனால், குறித்த கடன் திட்டத்தின் கீழ் அவசியமாகக் கடன் பெற்றுக் கொள்ள வேண்டிய மாணவர்கள் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. 2026 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட முன்மொழிவு தொடர்பாக இடம்பெற்ற ஆரம்பக் கூட்டத்தில் குறித்த கடன் திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கும், அதில் மாணவர்களுக்கு இடையூறுகள் ஏற்படாத வகையில் பிணையாளிகளை முன்னிறுத்துவதற்கும் வாய்ப்பு வழங்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கௌரவ ஜனாதிபதி அவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளார். அதற்கமைய, குறித்த கடன் திட்டத்தின் 09 ஆவது கட்டத்திலிருந்து மீண்டும் தாய்/தந்தை அல்லது பாதுகாவலரை முதலாவது பிணையாளிகவும், நெருக்கமான உறவினர் ஒருவரை இரண்டாவது பிணையாளியாகவும் முன்னிறுத்துவதற்கு மாணவர்கள் கடனைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு வழங்குவதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. இலங்கையில் நிகழ்நேர இலத்திரனியல் சிட்டை (e-invoice) முறைமையை நடைமுறைப்படுத்தல்**

இலங்கையில் தற்போது நிகழ்நேர (Real-time) இலத்திரனியல் சிட்டை முறைமை நடைமுறையில் இல்லாவிடினும், பல்வேறு நாடுகள் குறித்த இலத்திரனியல் சிட்டை முறைமை, வரி முறைமையை நவீனமயப்படுத்தல், வரி செலுத்தாமல் புறக்கணிப்பதைக் குறைத்தல் மற்றும் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களின் வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதனால், ஏற்புடைய விடயங்கள் தொடர்பாக சர்வதேச ரீதியாக ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளைக் கருத்தில் கொண்டு, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வரி திரட்டுவதற்காக அமுல்படுத்தியுள்ள வரி அறவீட்டு நிர்வாக முகாமைத்துவத் தகவல் முறைமை (RAMIS) இற்கு இணங்கியொழுகும் வகையில் இலத்திரனியல் சிட்டை வேலைச்சட்டகத்தைக் கடைப்பிடிப்பதற்காக மதிப்பாய்வொன்றைச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறித்த மதிப்பாய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில், இலத்திரனியல் சிட்டை முறைமையை நடைமுறைப்படுத்துவதன் ஆரம்பக் கட்டமாக பாதுகாப்பு இணையத்தள செயலி வேலைத்திட்ட இடைமுகப்பு (Web Appilication Programming Interface – Web API) வசதியை அறிமுகப்படுத்துவது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, பெறுமதி சேர் வரிப் பதிவு செய்துள்ளவர்களுக்கான Web API வசதியை வழங்குவதற்கு இயலுமாகும் வகையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வரி திரட்டுவதற்காக அமுல்படுத்தியுள்ள வரி அறவீட்டு நிர்வாக முகாமைத்துவத் தகவல் முறைமையை (RAMIS) மேம்படுத்துவதற்காக சிங்கப்பூரின் NCS Solution Pvt Limited இற்குத் தேவையான சேவைகளை வழங்குவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. லிற்ரோ கேஸ் லங்கா எரிவாயுக் கம்பனிக்கான திரவப் பெற்றோலிய வாயு (LP Gas) விநியோகிப்பதற்கான பெறுகையை வழங்கல்**

லிற்ரோ கேஸ் லங்கா எரிவாயுக் கம்பனிக்கான 2026 ஆம் ஆண்டுக்குத் தேவையான திரவப் பெற்றோலிய வாயு (LP Gas) விநியோகிப்பதற்காக, பெறுகை வழிகாட்டி – 2024 இன் ஏற்பாடுகளுக்கமைய இரட்டை கடித உறை முறையின் கீழ் தொழிநுட்ப மற்றும் நாணய முறிகள் கோரப்பட்டுள்ளன. அதற்கமைய, 05 விலைமுறிதாரர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பித்துள்ளதுடன், 02 விலைமனுக்கள் தொழிநுட்ப மதிப்பீட்டின் பின்னர் நாணய விலைமுறி மதிப்பீட்டுக்குத் தகைமை பெற்றுள்ளன. அதற்கமைய, குறித்த விலைமனுக்கள் தொடர்பான உயர்மட்ட நிரந்தரப் பெறுகைக் குழு மற்றும் பெறுகை மேன்மறையீட்டு சபை முன்வைத்துள்ள விதப்புரைகளின் பிரகாரம், 2026 ஜனவரி மாதம் தொடக்கம் 12 மாதங்களுக்கு திரவப் பெற்றோலிய வாயு 380,000 (+/-20%) மெற்றிக்தொன் லிற்ரோ

கேஸ் லங்கா எரிவாயுக் கம்பனிக்கு விநியோகிப்பதற்கான பெறுகையை, Geo Gas Trading S.A இற்கு வழங்குவதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. சீனாவின் சங்காய் விமான நிலையத்தில் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான நிலையக் கம்பனிக்கான தரையில் தொழிற்பாட்டு சேவைகள் வழங்கல் ஒப்பந்தம் மற்றும் களஞ்சியப் பண்டங்களை கையாள்வதற்கான சேவைகளை வழங்கும் ஒப்பந்தம்**

விமான சேவைக்கான தரையில் தொழிற்பாட்டு சேவைகளை வழங்குவதற்கான சேவை வழங்குநர்களால் மேற்கொள்ள வேண்டிய சேவைகளைத் திட்டவட்டமாகக் குறிப்பிட்டு சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கத்தால் நியமமான முறையில் தரையில் சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்தம் வெளியிடப்பட்டுள்ளதுடன், விமானப் பயணிகள், தரையில் சேவைகளை வழங்கல் மற்றும் களஞ்சியப் பண்டங்களைக் கையாள்தல் சேவைகள் போன்ற தரையில் மேற்கொள்ளப்படும் சேவைகள் அடங்கியுள்ளன. சீனாவின் சங்காய் விமான நிலையத்தில் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான நிலையக் கம்பனிக்கான விமானப் பயணிகள் சேவைகள் மற்றும் தரையில் தொழிற்பாட்டு சேவைகள் வழங்குவதற்கான ஒப்பந்தம் 2025.12.31 ஆம் திகதியுடனும், களஞ்சியப் பண்டங்களைக் கையாள்தல் சேவைகள் வழங்குவதற்கான ஒப்பந்தம் 2026.03.31 ஆம் திகதியுடனும் முடிவடையவுள்ளது. மேற்குறிப்பிட்ட சேவைகளை வழங்குவதற்காக மட்டுப்படுத்தப்பட்ட போட்டி விலைமுறிக் கோரல் செயன்முறையைக் கடைப்பிடித்து குறித்த விமான நிலையத்தில் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற அனுமதிப்பத்திர விற்பனையாளர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்கமைய, உயர்மட்ட நிரந்தரப் பெறுகைக் குழுவின் விதந்துரையின் அடிப்படையில், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள கீழ்வரும் யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- 2026.01.01 ஆம் திகதி தொடக்கம் 2028.12.31 வரைக்குமான 03 வருடங்களுக்கு விமானப் பயணிகள் சேவைகள் மற்றும் தரையில் தொழிற்பாட்டு சேவைகள் வழங்குவதற்கான ஒப்பந்தம், கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய ஒரேயொரு விலைமனுதாரரான China Eastern Airlines Co. Ltd இற்கு 27.929 மில்லியன் யுவான் மதிப்பீட்டுச் செலவில் வழங்குதல்
- 2026.04.01 ஆம் திகதி தொடக்கம் 2029.03.31 வரைக்குமான 03 வருடங்களுக்கு களஞ்சியப் பண்டங்களைக் கையாள்தல் சேவைகள் வழங்குவதற்கான ஒப்பந்தம், கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய ஒரேயொரு விலைமனுதாரரான China Eastern Air Logistic Co. Ltd இற்கு 5.167 மில்லியன் யுவான் மதிப்பீட்டுச் செலவில் வழங்குதல்

**09. திருகோணமலை மாவட்ட பொது மருத்துவமனையில் திடீர் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவை நிர்மாணித்தல்**

திருகோணமலை மாவட்ட பொது மருத்துவமனையில் திடீர் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2017 ஆண்டு வழங்கப்பட்டிருப்பினும், ஒப்பந்ததாரரின் குறைவான முன்னேற்றம் காரணமாக 2019 ஆண்டில் மேற்குறித்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்ட போது, கட்டிடத்தின் கூரை வரை கட்டுமான வேலைகள் நிறைவு செய்யப்பட்டிருந்தமையால், குறித்த கட்டுமான வேலைகளை இயன்றளவு விரைவாக நிறைவு செய்வது மிகவும் பொருத்தமானதென இனங்காணப்பட்டுள்ளது. அதற்கமைய, திருகோணமலை மாவட்ட பொது மருத்துவமனையில் திடீர் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்குப் பொருத்தமான ஒப்பந்தக்காரரைத் தெரிவு செய்வதற்காக புதிய பெறுகை செயன்முறையை ஆரம்பிப்பதற்காக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

**10. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 71 ஆவது பிரிவின் கீழான ஒழுங்குவிதிகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

எளிமைப்படுத்தப்பட்ட பெறுமதி சேர் வரித் திட்டம் 2025-10-01 திகதி தொடக்கம் இரத்து செய்யப்பட்டுள்ளதுடன், தகைமை பெற்ற வரி செலுத்துநர்கள் பெறுமதி சேர் வரியை அடிப்படையாக கொண்ட பெறுமதி சேர் பெறுமானத்தின் அடிப்படையில் வரியை மீள செலுத்துதலை குறுகிய காலத்தில் வினைத்திறனாக மேற்கொள்வதற்காக இடரை அடிப்படையாக கொண்ட பெறுமதி சேர் வரியை மீளச் செலுத்துவதற்கான பொறிமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது. 2002 ஆம் ஆண்டின் 14 இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 71 (4) (ஆ) பிரிவின் கீழ் வற் வரியை மீள செலுத்துவதற்கான முறையும் விதமும் பற்றிய ஒழுங்குவிதிகளை உருவாக்கலாம். அதற்கமைய உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் 2025-10-31 திகதிய 2460/44 இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 2002 ஆம் ஆண்டின் 14 இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 75 (3) பிரிவுக்கமைய மேற்குறித்த ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் (திருத்த) சட்டமூலத்தின் இறுதி வரைபு**

துரிதமான நகரமயமாக்கல், பாரதூரமான காலநிலை மாற்றங்கள், அதிகரித்துவரும் பாவனையாளர்களின் கேள்வி மற்றும் உருவாகிவரும் டிஜிற்றல் தொழில்நுட்ப அமுல்படுத்தல் காரணமாக முகங்கொடுக்க வேண்டியுள்ள மாற்றங்கள் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சிக்கலான சவால்கள் மற்றும் போட்டித்தன்மையைக் கருத்திலெடுத்து, மேற்குறித்த சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் இசைவாக்கம் அடைவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் (திருத்த) சட்டமூலத்தின் இறுதி வரைபை அரச வர்த்தமானியில் வெளியிட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக 2024.08.12 திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருப்பினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் செயற்பாடுகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்காக மேற்குறித்த சட்டமூலத்தை விரைவாக அமுல்படுத்த வேண்டிய தேவையைக் கருத்தில்கொண்டு, குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிட்டு பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. திடீர் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு துரிதமாக நிவாரணம் வழங்குதல்.**

மோசமான காலநிலை காரணமாக தோன்றியுள்ள திடீர் அனர்த்த நிலைமையை கருத்தில் கொண்டு, 2025-11-21 திகதி தொடக்கம் மீண்டும் அறிவிக்கும் வரை விரிவான அனர்த்த நிலைமை அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த அனர்த்த நிலைமையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழக்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்குத் தேவையான துரித நிவாரணங்கள் மற்றும் வசதிகளை வழங்கும் போது பின்பற்ற வேண்டிய முறைமை தொடர்பாக பெறுகை ஆணைக்குழுவின் ஒப்புதலுடனும், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி 05/2025 இலக்க பாதீட்டு சுற்றறிக்கை மற்றும் தேவையான பெறுகை செயற்பாடுகளை தடையின்றி மேற்கொள்வதற்காக அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்களுக்கு அதிகாரத்தை ஒப்படைத்து, 06/2025 இலக்க பாதீட்டு சுற்றறிக்கை திறைசேரி செயலாளரால் வெளியிடப்பட்டுள்ளது. அனர்த்த நிவாரண சேவைகள் மற்றும் அவசர பதில்வினையாற்றலுக்காக 2025 ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக 550 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு வழங்குவதற்ககாக குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இதுவரை ஒரு வாரத்துக்கு வழங்கப்பட்ட 1,800 ரூபா தொகையை 3,600 ரூபா ஆகவும், 2,100 ரூபா தொகையை 10,500 ரூபா வரையும் அதிகரிக்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தேவையான நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வருதல் தொடர்பில் தொடர்ந்தும் தேவையான அனுமதிகள், வழிகாட்டல்கள் மற்றும் மேலதிக நிதி ஒதுக்கிடுகளை வழங்குவதற்காக திறைசேரி செயலாளருக்கு அதிகாரம் வழங்குவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 13. 'விவசாய பசுமை தொடக்க முயற்சி' (Agri Green Initiative) – பேண்தகு விவசாய நடைமுறைகள் மூலமாகப் பசுமைப் பொருளாதார விருத்திக் கருத்திட்டத்தை அமுல்படுத்தவதற்காக ஐரோப்பிய ஒன்றியத்துடன் நிதியளிப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்ளல்

இறப்பர் பயிர் செய்யப்பட்டுள்ள மேல், சப்ரகமுவ, ஊவா, கிழக்கு, தெற்கு, மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களில் பேண்தகு விவசாய நடைமுறைகள் மூலமாக பசுமைப் பொருளாதார விருத்திக்கான விவசாய – பசுமைத் தொடக்க முயற்சிகளை அமுல்படுத்தவதற்கான கருத்திட்ட முன்மொழிவு பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு, இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் மற்றும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த கருத்திட்டம் ஐரோப்பிய ஒன்றியத்தின் 08 மில்லிய்ன யூரோ நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், பிரதான அமுல்படுத்தல் நிறுவனமாக ஐரோப்பிய ஒன்றியத்தால் ஜேர்மன் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (GIZ) தெரிவு செய்யப்பட்டுள்ளது. பேண்தகு நுகர்வு மற்றும் உற்பத்தி நடைமுறைகள் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற பசுமைப் பொருளாதார விருத்தியை நோக்கி மாற்றமடைவதற்கு ஒத்துழைத்தல் மற்றும் இளைஞர்கள் மற்றும் பெண்கள் மீது விசேட கவனம் செலுத்தி தேர்ந்தெடுத்துள்ள உற்பத்திச் சங்கிலியில் மிகவும் பேண்தகு முறையிலும் சுற்றாடல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த விவசாய நடைமுறைகளுக்கு மாற்றமடைவதற்கு ஊக்குவித்தல் போன்றன இக்கருத்திட்டத்தின் நோக்கங்களாகும். அதற்கமைய, 'விவசாய பசுமை தொடக்க முயற்சி (AgriGree Iniative) – பேண்தகு விவசாய நடைமுறைகள் மூலம் பசுமைப் பொருளாதார விருத்தி' கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 08 மில்லியன் யூரோ நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக ஐரோப்பிய ஒன்றியத்துடன் நிதியளிப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 14. 'Rebuilding Srilanka நிதியத்தை' தாபித்தல்

இலங்கை 'தித்வா' எனப் பெயரிடப்பட்ட மிகவும் மோசமான புயல்காற்றுக்கு கடந்த சில நாட்களாக முகங்கொடுத்து வருவதுடன், அதன் விளைவாக பல நூற்றுக்கணக்கான உயிர்கள் இழக்கப்பட்டுள்ளன. அத்துடன், தனியார் மற்றும் பொதுச் சொத்துக்கள் பாரியளவிலும், நெடுஞ்சாலைகள், பாலங்கள், புகையிரதப் பாதைகள், நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுக்கள், நீர்ப்பாசனக் கட்டமைப்புக்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளுக்கு மோசமான அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. அதனால், மக்களின் பொதுவாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், நெற்செய்கை மற்றும் மரக்கறிச் செய்கைகளைப் போலவே மீன்பிடித்துறை உள்ளிட்ட கிராமிய தொழிற்றுறைகள் பல பாதிக்கப்பட்டுள்ளன. தற்போது நாடு முழுவதும் அவசரகாலச் சட்டம் பிரகடனப்பட்டுள்ளதுடன், பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிக முகாம்களில் தங்கியிருக்கின்றனர். சொத்தழிவு மற்றும் உயிரிழப்புக்களுக்கு அப்பால் புயல்காற்றால் ஏற்பட்ட கனமழை காரணமாகவும் வெள்ளப் பெருக்காலும் பல்வேறு பிரதேசங்களில் நீர் வழங்கல், மின்சாம் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. அரசு முப்படையினர், பொலிசு, அனர்த்த

முகாமைத்துவ நிலையங்கள் மற்றும் தேசிய பிரதேச நிர்வாகத்தின் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அத்தியாவசிய சேவைகளை துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பினும், ஏற்பட்ட இழப்புக்களின் தீவிரத்தன்மையால் குறித்த சேவைகள் போதுமானதாக இல்லையெனக் கண்டறியப்பட்டுள்ளது. அரசால் அவசர அனர்த்த நிவாரணமாக தற்போது 3 பில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்திருப்பினும், நாடு முழுவதும் வீடுகள், உட்கட்டமைப்பு வசதிகள், விவசாயப் பயிர் நிலங்கள், மீன்பிடித்துறை மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை மீள்நிலைக்குக் கொண்டு வருவதற்குப் போதுமான நிதி இல்லையெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதனால், ஜனாதிபதி செயலகத்தின் கீழ் இயங்குகின்ற நியதிச்சட்ட நிதியமாக 'Rebuilding Srilanka நிதியத்தை' தாபித்து, அதற்காகவென ஒதுக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கின் மூலம் நன்கொடையாளர்கள் நலன்விரும்பிகளின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கும், தற்போது திறைசேரிக் கணக்குக்கும் மத்திய வங்கிக்குக் கணக்குக்கும் கிடைத்துள்ள நிதியை உத்தேச நிதியத்தின் ஆரம்ப மூலதனமாகப் பெற்றுக் கொண்டு அனர்த்தங்களுக்கு உள்ளாகியுள்ள மக்களின் வாழ்க்கையும் வாழ்வாதாரத்தையும் மீண்டும் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குறைநிரப்புப் பொறிமுறையொன்றை அமுல்படுத்துவதற்காக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**15. திறைசேரி பிரதிச் செயலாளர் பதவிக்கு நியமித்தல்**

திறைசேரியின் பிரதிச் செயலாளராகக் கடமையாற்றிய இலங்கை திட்டமிடல் சேவையின் விசேடதர அதிகாரியான, திரு. டீ.ஏ.பீ.அபேசேகர அவர்கள் 2025.11.13 அன்று 60 வயது பூர்த்தியடைந்து அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். அதற்கமைய, வெற்றிடமாகவுள்ள திறைசேரி பிரதிச் செயலாளர் பதவிக்கு, கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக தற்போது கடமையாற்றுகின்ற இலங்கை திட்டமிடல் சேவையின் விசேடதர அதிகாரியான, திரு. எஸ்.எஸ். முதலிகே அவர்கள் பொருத்தமானவரென அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, தற்போது வெற்றிடமாகவுள்ள திறைசேரி பிரதிச் செயலாளர் பதவிக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை திட்டமிடல் சேவையின் விசேடதர அதிகாரியான, திரு. எஸ்.எஸ். முதலிகே அவர்களை நியமிப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**